**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070120225100

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.04.2022

Accepted: 15.06.2022

Published: 01.07.2022

Citation:
Mahalakshmi, P. "The Prosperity of Parambumalai and the Life of the People in Veerayuga Nayagan Velbari Novel." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 91–96.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15100.

*Corresponding Author:
mahaaperumal@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Prosperity of Parambumalai and the Life of the People in Veerayuga Nayagan Velbari Novel

**P. Mahalakshmi**
*Research Scholar, Department of Tamil Studies*
*Annamalai University, Annamalai Nagar, Chidambaram, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-8213-9529*

**Abstract**
Nature is God's greatest gift to this world. Nature gives life to man. If there is no nature, there is no moisture in the soil, no yield, no human life. Nature provides an opportunity for living beings to live interdependently. Veerayuga Nayagan Velbari is a novel written by Su.Venkatesan about Parambu Malai Nayagan Velbari and the life norms of these people. The author Su.Venkatesan has emphatically recorded that 'Bari is not a symbol of a ruined social system but is forever admired as a great example of imperishable human character. This article explores the resources of Parambu Hill and the lifestyle of these people mentioned in this novel.

**Key Words:** Velbari, Parambu Hill, Su. Venkatesan, Tholkappiyam, Pari Vendan.

**References**

1. Palayan, A.P. 2008. *Purananuru Moolum Uraiyum*, Sarada Pathipagam.
2. Jagannathan, Ke. Va. 1954. *Parivel Amudham* (Amuda Nilayam Pvt Ltd) Chennai.
3. Pulawar Maru. Paramaguru, Parambumalai Thirukzhukunram Kapilan Pathipagam.
4. Su. Venkatesan. 2018. *Veerayuga Nayagan Velbari*, Chennai, Vikadan Prasuram.

# 'வீரயுக நாயகன் வேள்பாரி' நாவலில் பறம்புமலையின் வளமும் அம்மக்களின் வாழ்வும்

*ப. மகாலட்சுமி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

***ஆய்வுச்சுருக்கம்***

*இறைவன் இம்மண்ணுலகிற்கு அளித்த மாபெரும் கொடை இயற்கை. இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. இயற்கை இல்லையென்றால் மண்ணில் ஈரமில்லை. விளைச்சலில்லை, மனித வாழ்க்கை இல்லை. உயிரினங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருவது இயற்கை. இதை மிகத் தெளிவாக உணர்த்த பறம்பு மலை நாயகன் வேள்பாரியைப் பற்றியும், அம்மக்களின் வாழ்வியல்நெறிகள் பற்றியும், சு.வெங்கடேசன் எழுதிய நாவலே வீரயுக நாயகன் வேள்பாரி. "பாரி அழிந்த சமூகஅமைப்பின் அடையாளமாக இல்லாமல், அழியக்கூடாத மனிதப் பண்பின் பேரடையாளமாக என்னென்றும் போற்றப்படுகிறான் என்பதை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார் ஆசிரியர் சு. வெங்கடேசன். இந்நாவலில் கூறப்பட்டுள்ள பறம்பு மலையின் வளங்களையும், அம்மக்களின் வாழ்வியலையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *வேல்பாரி, பறம்பு மலை, சு.வெங்கடேசன், தொல்காப்பியம், பாரி வேந்தன்.*

**முன்னுரை**

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்குடி. இப்பெருமைப்பெற்ற தமிழ்ச் சமூகத்தில் தோன்றிய மாந்தன் சங்க காலத்தில் வேட்டைச் சமூகமாகவே திரிந்து இருந்த நிலையில், மலையின் சற்றுக் கீழ்ப்பகுதியில் இறங்கி இனக்குழுக்களாக சேர்ந்து மலைப்பகுதியில் கிடைத்த ஆநிரைகளை வைத்து வேளாண் தொழிலைத் தொடங்கினான்.

சங்ககால மக்கள் தமிழ் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து வைத்திருந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகைத் திணைகளுள் "குறிஞ்சித் திணை" என்பது மலைகளின் இயற்கை வளத்தைப் பற்றி பாடும் திணையாகும்.

தொல்காப்பியர் குறிஞ்சித்திணையைப் பற்றி,

**சேயோன் மேய மைவரை உலகமும்**
**(பொருளதிகாரம், அகத்திணையியல், பா. 5)**

என்றுக் குறிப்பிடுகிறார்.

குறிஞ்சித்திணை பாடுவதில் வல்லவர் கபிலர். "குறிஞ்சிக்கோர் கபிலர்" என அவர் போற்றப்படுகிறார். பெரும்புலவர் கபிலரால் பாடப்பட்ட மலை "பறப்புமலை" பறம்பு மலையைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

பறம்பு மலையின் இயற்கை வளம், காடு பற்றி அம்மக்களுக்கு இருக்கும் அறிவு, அம்மலையில் நடைபெறும் கொற்றவைக் கூத்து, பாரி வேந்தனின் மாண்பு போன்றவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டள்ளது.

**இயற்கை வளம்**

***உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே;***
***(புறநானூறு, பா. 109)***

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளுக்கு ஏற்ப, பறம்பு நாட்டில் மனிதன் உழைத்து விளைவிக்கக்கூடிய பொருள் என எதுவும் இல்லை. இயற்கையில் தாமாகவே உணவுப் பொருட்கள் விளைகின்றன. அந்நாட்டு மக்களுக்கு உணவு என்பது சேகரிப்பு தானே தவிர, உற்பத்தி அல்ல என்று கூறுமளவிற்கு உணவுப்பொருட்களின் விளைச்சல் சிறப்பாக இருந்தது.

பறம்பு மலையில் உள்ள "கொல்லிக்காட்டு விதை", அம்மலையின் ஆதிப்பொருட்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. இதை சாப்பிடும் பறவைகளும், மீன்களும் சிறிது நேரத்தில் மயங்கிவிடும். காட்டுவழியில் நெடுந்தூரப் பயணத்தின்போது உணவைப் பெற பேருதவியாக இவ்விதை விளங்கியது.

"தனை மயக்கி" என்னும் மூலிகை நினைவை மட்டுமே மயக்கும். உடல் இயக்கத்தை நிறுத்தாது. இது போன்ற அரியவகை மூலிகைகள் பறம்பு மலையில் காணப்படுகின்றன.

அம்மலை மக்கள் தம் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை அமர வைக்க, அகலமான "திறளி" மரப்பலகையைப் பயன்படுத்தினர். இத்தகைய "திறளிமரம்" மூவேந்தர்களுக்கும் பிடித்த மரமாகக் கருதப்பட்டது. அதற்குக் காரணம் யவனர்களுடனான வணிகத்தில் "திறளிமரத்தோணிகளே" மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன.

பறம்பு மலையில் உள்ள "காக்காவிரிச்சி" என்னும் பறவை வௌவால் இனத்தைச் சேர்ந்த இரத்தம் குடிக்கும் பறவையாகும். இது பருந்து இனங்களை மட்டுமே வேட்டையாடும் அதிசயப்பறவை ஆகும்.

"அறுபதாங்கோழி" காட்டின் அதிசயங்களில் ஒன்று. கோழியைப்போல் உடலும், சேவலைப் போல் வாலும் கொண்டிருக்கும். அறுபது நாட்களுக்கு ஒரு முறை தான் முட்டையிடும். இறப்பதற்கு முன் பகற்பொழுதில் சேவலைப் போல் பெருங்குரல் எடுத்துக் கூவிவிட்டு செத்துப்போகும்.

ஒரு பெண்ணின் அணுக்கத்தால் மலரும் மரம் "ஏழிலைப்பாலை". அந்த மரத்தின் வாசனைக் காமத்தைத் தூண்டும். இக்காட்டில் இருக்கும் பேரதிசயங்களில் இதுவும் ஒன்று.

இதுபோன்ற அரியவகைத் தாவரங்களும், விலங்குகளும் பறம்புமலையில் காணப்படுகின்றன.

**காடு பற்றிய அறிவு**

***மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்***
***காடும் உடைய தரண் (742)***

என்னும் குறளுக்கேற்ப பறம்பு மலையில் உள்ள காடுகள் அமைந்துள்ளன. அங்கு வாழும் மக்கள் காடு பற்றிய பேரறிவு உடையவர்களாக உள்ளனர்.

பறம்பு மலையில் எட்டுவயதான சிறுவர்கள், "காடு அறிதல்" பயணத்திற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். அதன் பிறகு அவர்கள் மாவீரராகத்தான் வீடுதிரும்புகின்றனர். இப்பயணயத்தில் வழிகாட்டியாக அழைத்துச் செல்பவனே "தேக்கன்". தேக்கன் என்பது பெயரன்று. "காடறிந்த ஆசானை" அழைக்கும் பட்டம் ஆகும்.

"அத்தாப் பொறுத்தி" என்னும் மூலிகையைக் கொண்டு, சதையை அறுத்துக் கொண்டு போனாலும் அதைப் பொருத்திக் கொள்ளும் மருத்துவத்தைப் பறம்பு மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.

"பால்கொறண்டி" என்பது வியப்பிற்குரிய செடி. காய்ந்த சருகைவிட அதிவேகமாக பற்றி எரியும் ஆற்றலுடையது. இதன் மூலம்

மழைக்காலத்திலும் நெருப்பு மூட்டிக் கொள்ள அம்மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.

"தில்லை மரக்கட்டையை" எரிக்கும்போது வெளிவரும் புகையால் பார்வை பறிபோகும். எனினும் ஆற்றங்கரையின் "ஆதிக்களியை" கொண்டு வந்து கண்ணின் மீது பூசினால், பார்வை மீண்டும் கிடைக்கும். இது போன்ற வியக்கத்தக்க அறிவை அம்மக்கள் பெற்றிருந்தனர்.

பறம்பு மலைக்குப் புதிதாக வரும் நபருக்கு, கூடை நிறைய நாவற்பழத்தைத் தருவது அவர்களின் விருந்தோம்பல் மட்டும் அல்ல, காடு பற்றிய அவர்களின் அறிவை அறிவதும் தான். பலவகை நாவற்பழங்களில் ஒவ்வொன்றிற்கும் தனித்த சுவை உண்டு. எந்த நாவல் பழத்தை முதலில் எடுத்து உண்ண வேண்டும் என்பதில் தொடங்குகிறது காடு பற்றிய அவர்களின் அறிவு.

காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள பறம்புமலை மக்கள் "நாகபப்சைவேலி"யை பெருங்கோட்டையாக எழுப்பினர். அதில் உள்ள தாவரங்கள் தாமாக முளைத்தவை அல்ல. பெரும் உலகெங்கிலும் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு முளைக்க வைக்கப்பட்டவை. இதில் உள்ள படர் கொடிகளும், சுற்றுக் கொடிகளும் தான் "நாகப்பச்சை வேலி" யின் உயிர்நாடியாக உள்ளது.

காடு, மிகவும் தூய்மையான இடம் மட்டுமல்ல; மனித இதயத்திற்கு மிக நெருக்கமான இடமாகவும் விளங்குகிறது என்பதை பறம்புமலை மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.

**கொற்றவைக் கூத்து**

**கடுஞ்சூர் கொன்றை பைம்பூட் சேஎய் பயந்தமா**
**மோட்டுத் துணங்கை அம் செல்வி**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 5)**

முருகனின் தாயாகிய கொற்றைக்கு பல்வேறு இனக்குழுக்கள் ஒன்றிணைந்து, பறம்பு மலையில் விழா நடத்துகின்றனர்.

ஆதிமலையில் உள்ள பெருங்கடலின் நடுவில் இருந்து கதிரவன் மேலெழும்பி வருவான். அக்கதிரவனிலிருந்து நீளும் ஒளிவாள் நான்காண்டுகளுக்கு ஒருமுறை அரைநாழிகை மட்டுமே நிகழும் நிகழ்வாக உள்ளது. இந்நிகழ்வு நடந்த மூன்றாம் நாள் கொற்றவைக் கூத்து தொடங்கும்.

கொற்றவைக் கூத்து பாலை நிலத்திற்கு உரியது தானே? அதை ஏன் குறிஞ்சி நிலத்தில் நடத்துகிறீர்கள்? எனக் கபிலர் கேட்டக் கேள்விக்கு இது ஐந்திணைக்கும் உரிய கூத்து என்று பாரி பதிலளித்தான்.

மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பதினாறு குலங்களின் மிச்சங்கள் இப்போது பறம்பு நாட்டில் வசிக்கின்றன. அவர்களின் போர் தெய்வமான கொற்றவையிடம் முறையிட்டு, வஞ்சினம் உரைக்கும் விழாவே கொற்றவை விழா ஆகும். இவ்விழா பதினேழு நாட்கள் நடைபெறும்.

முதல் நாள் விழாவில் "அகுதைக்குலம்" அழிந்த வரலாற்றை கிணைப்பாணன் பாடுகின்றான். இவர்கள் வேளாண் அறிவின் நுணுக்கத்தை உலகிற்கு எடுத்துரைத்தவர்கள்.

இரண்டாம் நாள் "துடிப்பறை"யின் ஒலியோடு "செம்பா தேவியின்" கதைத் தொடங்கப்பட்டது. இவர்கள் கால்நடைகளை தெய்வமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.

மூன்றாம் நாள் விழாவில் "பகுளி" என்ற பறையை இசைக்க, நாகக் குடிகளின் கதைகள் பாடப்பட்டன.

நான்காம் நாள் கூத்துக்கான சல்லென்ற சல்லிகையின் ஓசைக்கேட்டது. அதற்கு மறுநாள் மலைதெய்வம்"சாத்தனுக்காக" இசைக்கப்படும் இசைக்கருவியான "அடக்கத்தின்" ஓசைக் கேட்டது.

ஆறாம் நாள் பலா மரத்தினால் செய்யப்பட்டுக், கரடி கத்துவதுப்போல் ஓசை எழுப்பக்கூடிய "கரடிகை"யின் ஓசைக் கேட்டது. எட்டாம் நாள் சத்தமே இல்லாமல் விட்டு விட்டு மனிதர்கள் கத்தும் ஓசை மட்டும் கேட்டது. இது "கூவல்குடி" எனப்பட்டது.

ஒன்பதாம் நாள் "கொம்பன் குடியைப்" பற்றியக் கதையும், பதினாறாம் நாள் "அரிமான்களின் கதை"யும் பாடப்பட்டன. பதினேழாம் நாள் வேளிருக்கு உரியது. அனைத்துக் குடிப்பாணர்களின் இசைக் கருவிகளும் ஒரு சேர முழங்க, காடு கிடுகிடுக்க, காண்போர் நடுநடுங்க களமிறங்கி ஆடுபவன் "வேள்பாரி". கொற்றவைக்கு முன் காட்டெருமையைப் பலியிட்டு, பறம்பின் எல்லைக்குள் வந்த குலங்களின் கண்ணீர் துடைக்க, உயிரையும் தரச்சித்தம் என உருகிச் சொல்லும் பெருநாளே கொற்றவைக் கூத்தின் இறுதி நாளாகும்.

பறம்பு மலையில் நடைபெறும் இவ்விழாவின் மூலம், அங்கு வாழும் பல்வேறு இனக்குழுக்களின் வாழ்க்கை முறைகளை அறியலாம்.

**பாரி வேந்தனின் மாண்பு**

***படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்***
***உடையான் அரசருள் ஏறு (381)***

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க தலைமைப் பண்பு கொண்டவனாக வேள்பாரி திகழ்ந்தான். பறம்பு நாடு நானூறுகும் மேற்பட்ட ஊர்களைக் கொண்டிருந்தது. இதன் தலைநகர் "எவ்வியூர்" ஆகும். இதை ஆட்சி செய்தவன் வேள்பாரி.

குலத்தலைவர்கள் மற்றும் சிற்றரசர்களின் ஆற்றலையும், வள்ளல் தன்மையையும் பாணர்கள் விடாமல் பாடினர்.

அனைத்து மன்னர்களிடமும், பரிசில் பெற்ற பாணர்கள், பாரியிடம் மட்டுமே கருணையைப் பெற்றனர். இதிலிருந்து பாரியின் கொடைத்தன்மையை அறியலாம்.

பாணர்கள் தங்கள் நினைவை மறந்தும் கூட, பாரியைப் பற்றிய பாடலையே பாடினர். இதிலிருந்து பாரி பறம்பு நாட்டை மட்டுமல்லாமல் பாணர்களின் மனதையும் ஆட்சி புரிந்தான் என்பதை நம்மால் உணர முடியும்.

பாணர்களின் பாடல்கள் மூலம் பாரியின் புகழ் தமிழ் நிலம் முழுவதும் பரவியது. இதனால் மூவேந்தர்களும் பாரியின் மீது பொறாமைக் கொண்டனர். பாரியின் மாவீரம், பறம்பு நாட்டின் நிலவியல் அமைப்பு, இவற்றின் காரணமாக பாரியை அவர்களால் ஒன்றும் செய்து விட முடியவில்லை. எனினும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர்.

தன்னைக் காண வந்த கபிலரை பாரி, தன் தோளிலே சுமந்து கொண்டு எவ்வியூர் வரை சென்றான்.

கபிலருக்கு "அத்திமதுவும், அறுபதாங்கோழியும்" விருந்தாகப் படைக்கப்பட்டது. மேலும் பறம்பு மலையின் குளிரை எதிர்கொள்ள முடியாத கபிலருக்கு, 'பேரெலி"யின் மயிர் கொண்டு போர்வை செய்துக் கொடுக்க உத்தரவிட்டான் பாரி.

கபிலரை பிரிய மனமில்லாத பாரி ஒரு நாள் உங்களின் வானமாக நாங்கள் விரிந்திருப்போம் எனக்கூறி அவரை பறம்பிலேயே தங்க வைக்க முயற்சிப்பதன் மூலம் பாரி கபிலர் மீது கொண்ட பற்றை அறியலாம். பாரியின் தூய அன்பினைக் கண்ட கபிலர், “மண்ணை வேர் ஊடுருவுவது போல, மனங்களை ஊடுருவுகிறான் பாரி” என எண்ணிக் கலங்கினார். இதன் மூலம் வேள்பாரியின் மாண்பினை அறியலாம்.

## முடிவுரை

சங்க கால மக்கள் தம் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என்றும், தாம் வாழ்ந்த இயற்கை சூழலுடன் கூடிய இடத்திற்கு திணை என்றும், தம் வாழ்வியலை வளமுடன் கூடிய வாழ்வாக பாகுபடுத்திக் கொண்டான்.

பறம்பு மலையின் இயற்கை வளம் குறிஞ்சித்திணைக்கே உரிய வனப்பை ஒரு சேரப்பெற்று காணப்படுகின்றது. பறம்பு நாடு பல இனக்குழுக்களின் கூட்டுக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

மேலும் அம்மக்களின் இயற்கைப் பற்றிய அறிவு, காடு பற்றிய அறிவு, வானியல் பற்றிய அறிவு, மூவேந்தர்களையே வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் இருந்தது.

பறம்பு மலையின் இயற்கை வளமும், அம்மக்களின் வாழ்வியல் நெறிகளும், பண்பாட்டுக் கூறுகளும் நம் நாட்டின் தனித்த அடையாளமாகத் திகழ்கிறது.

## துணை நின்ற நூல்கள்

1. அ.ப. பாலையன். 2008. *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம்.
2. கி.வா. ஜகந்நாதன். 1954. பாரிவேள். சென்னை, அமுதம் (அமுதநிலையம் பிரைவேட் லிமிடெட்).
3. புலவர் மரு. பரமகுரு, *பறம்புமலை திருக்கொழுக்குன்றம்*, கபிலன் பதிப்பகம்.
4. வெங்கடேசன், சு. 2018. சென்னை. *வீரயுக நாயகன் வேள்பாரி*. விகடன் பிரசுரம்.